<u>முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>

**இ.ஏ.எண். 56/2017**

**<u>இன்</u>**

**<u>இ.பி.எண். 33/2017</u>**

**<u>இன்</u>**

**<u>ஓஎஸ் எண் 01/2002</u>**

**நாள் :21.07.2023.**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு ம.சா.1 சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

பெயர் : ம.சா.1. திரு. சிட்டிபாபு (எ) தேவராஜீலு
வயது :
த/பெ :
தொழில் :
மதம் :
விலாசம் :

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

இதே நீதிமன்றத்தில் இ.பி.33/2017 ல் இ.ஏ 165/2021 என்கிற மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் என்ன பரிகாரம் கேட்டேன் என்றால் பிரிவு 6 இந்து வாரிசு உரிமை சட்டத்தின் கீழ் நிறைவேற்று மனுவை 27.06.2017 அன்று ஐ.ஏ 408/2010 இன் ஓ.எஸ் 1/2002 ல் பிறப்பிக்கபட்ட இறுதிநிலை தீர்ப்பாணை நிறைவேற்றுகூடியது அல்ல என்பதால் நிறைவேற்று மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மனுதாக்கல் செய்தேன். மேற்படி மனுவானது என்ன ஆயிற்று என்றால் தள்ளுபடி செய்யப்பட்டது. 2021ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இ.ஏ 56/2017ல் அதே பரிகாரம் தான் கேட்டு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். வாரிசு உரிமை சட்டம் பிரிவுகள் 6 மற்றும் 8 பற்றி அசல் வழக்கு எண் 01/2002ல் தான் கேட்டு இருக்கவேண்டும் என்றால் எனது வழக்கறிஞர் செய்த தவறுனால் நான் பாதிப்பு அடைந்துள்ளேன். அதனால் தான் இந்த நிறைவேற்று மனுவில் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளேன். 3 வருட காலத்திற்குள் தான் அந்த பரிகாரம் கேட்டு மனுதாக்கல் செய்து இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இந்த மனுவில் கோரியுள்ள பரிகாரம் காலம் தோஷத்தால் பாதிக்கப்பட்டு காலாவதி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. இம்மனுவில் உள்ள எதிர்மனுதாரர்கள் எனது மகன்கள் என்றால் சரிதான். பாகபிரிவினை வழக்கில் 3/2 பாகம் கிடைத்தும் அதை அனுபவிக்க முடியாத படி நான் மாண்புமிகு உச்சநீதிமன்றம் வரையில் சென்றேன் என்றால் சரியல்ல. பாகபிரிவினை வழக்கில் கிடைத்த பாகத்தை எதிர்மனுதாரர்கள் அனுபவிக்ககூடாது என்பதற்காக இதே நீதிமன்றத்தில் வருடத்திற்கு ஒரு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் இ.ஏ 55/2019

என்ற மனுவினை ஜெ.பாபு என்பவரை மேற்படி நிறைவேற்று மனுவில் சேர்ப்பதற்காக தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.இ.ஏ 18/2018 என்கிற மனுவினை இ.ஏ 56/2017 ல் முடியும் வரையில் நிறைவேற்று மனுவை நிறுத்தி வைப்பதற்காக தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.இ.ஏ 164/2021 என்கிற மனுவினை நிறைவேற்று மனுவான 33/2017 செல்லதக்கது அல்ல மற்றும் நிலைதக்கது அல்ல அதை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.என் மகன்களுக்கு பாகபிரிவினை சொத்துக்கள் கிடைக்ககூடாது என்பதற்காக பல்வேறு மனுக்களை தாக்கல் செய்து இருக்கிறேன் என்றும் தற்போது இந்த மனுவினையும் தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**(மறுவிசராரணை இல்லை)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**முதன்மை சார்பு நீதிபதி**
**பொன்னேரி.**